DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 389/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வெங்கடேசன் |
| Father / Husband Name | அர்சுணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கீழவலம் கிராமத்தில் வசித்து கருங்குழி இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகமில்லை. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 17.04.2025 ம் தேதி இரவு 7.45 மணிக்கு நான் பெட்ரோல் பங்கில் இருந்தபோது TN 12 AK 3979 என்ற இருசக்கர வாகனத்தில் சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கி வந்த ஒரு நபர் மீது முன்னால் ஆஜர் எதிரி ஓட்டிவந்த KA 01 AG 8590 என்ற டேங்கர் லாரியை எந்தவித சைகையும் காட்டாமல் திடீரென்று வலது புறமாக திருப்பியதால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதை நேரடியாக பார்த்தேன் என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்ததால் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 389/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பாலாஜி |
| Father / Husband Name | ரேணு |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பொரசப்பட்டு கிராமத்தில் வசித்து பில்டிங் கான்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வினோத் என் அண்ணன் மகன் ஆவார். 17.04.2025 ம் தேதி மாலை 4.00 மணிக்கு சென்னையில் இருந்து கிளம்பி ஊருக்கு வினோத் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் கருங்குழி இந்தியன் பெட்ரோல் பங்க் அருகே வரும்போது ஒரு டேங்கர் லாரி எவ்வித கைசையும் காட்டாமல் லாரியை திருப்பும்போது இருசக்கர வாகனத்தில் வந்த நபர் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நாங்கள் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது வினோத் தலை நசுங்கி சம்பவயிடத்தில் இறந்துவிட்டார். பின்னர் வினோத்தின் பிரேத்தின் மீது போலிசார் விசாரணை நடத்தினார்கள் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுக்க நான், வினோத்தின் மனைவி, அர்சுணன், சதீஷ்குமார் ஆகியோர் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்துதான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 389/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சதீஷ்குமார் |
| Father / Husband Name | சண்முகம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பொரசப்பட்டு கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வினோத் என் சித்தப்பா மகன் ஆவார். 17.04.2025 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நான் வீட்டிற்கு வரும்போது வினோத்தின் அப்பா அம்மா அழுதுக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் என்ன என்று கேட்டபோடது வினோத் சென்னையில் இருந்து கிளம்பி ஊருக்கு அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் கருங்குழி இந்தியன் பெட்ரோல் பங்க் அருகே வரும்போது ஒரு டேங்கர் லாரி எவ்வித கைசையும் காட்டாமல் லாரியை திருப்பும்போது இருசக்கர வாகனத்தில் வந்த நபர் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நாங்கள் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது வினோத் தலை நசுங்கி சம்பவயிடத்தில் இறந்துவிட்டார். பின்னர் வினோத்தின் பிரேத்தின் மீது போலிசார் விசாரணை நடத்தினார்கள் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுக்க நான், வினோத்தின் மனைவி, அர்சுணன், பாலாஜி ஆகியோர் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்துதான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 389/2025

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பால்ராஜ் |
| Father / Husband Name | யாசர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிணார் கிராமத்தில் வசித்து வாட்ச்மேன் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா4 ன் இரண்டாவது கையொப்பம் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 8 மாதத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 8.00 மணியளவில் நான் மாப்பிள்ளை மெஸ் உணவகத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது போலிசார் பெட்ரோல் பங்க் அருகே விபத்து நடந்தது சம்மந்தமாக போலிசார் சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 18.04.2025 ம் தேதி காலை 8.00 மணிக்கு நானும் ஜீவராகவன் என்பவரும் கருங்குழி இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் அருகே இருந்தபோது போலிசார் ஒரு டேங்கர் லாரி மீது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. அதில் நானும் ஜீவராகவனும் கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை. மேற்படி பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.